**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.67/2024 - PW-3**

| | |
|---|---|
| Name | திரு.அரிதாஸ் |
| Husband/Father Name | ரவி |
| Village /Area | புதுப்பட்டு |
| Taluk | நெமிலி |
| Occupation | கூலி |
| Age | 24 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 26.11.2025.

**(1–ம் எதிரி ஆஜர். எதிரிகள் 2 மற்றும் 3 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்த பாஸ்கரன் என்னுடைய சிறிய தாய்மாமன். அசா.1 முரளி என்னுடைய மூத்த தாய்மாமன். அசா.2 நாகம்மாள் என்னுடைய தாய் வழி பாட்டி. கடந்த 08.11.2016 அன்று மாலை 03.00 மணியளவில் என் பாட்டியும் பாஸ்கரன் மாமாவும் வீட்டில் இருந்துள்ளார்கள். அப்போது ஆஜர் எதிரியான ராமுவும், மணியும் எனது பாட்டி வீட்டிற்கு வந்து எனது சிறிய தாய்மாமா வான பாஸ்கரனை அவர்களுடன் அழைத்து சென்றார்கள்.

ஆஜர் எதிரிகளும் எனது சிறிய தாய் மாமாவும் நண்பர்கள். அடிக்கடி அவர்களிடையே பிரச்சனை ஏற்படும் அதை ஊருக்குள்ளேயே பேசி தீர்த்துக் கொள்வது வழக்கம். இரவு நேரம் ஆன பிறகும் என் சிறிய தாய் மாமா வீட்டிற்கு திரும்ப வில்லை ஆனால் எதிரிகள் மட்டும் வீட்டிற்கு வந்து விட்டார்கள். பிறகு சந்தேகத்தின் அடிப்படையில் மறுநாள் காலை ஆஜர் எதிரிகளிடம் சென்று எனது சிறிய தாய் மாமாவை பற்றி விசாரித்த போது அதற்கு அவர்கள் சரியான பதிலை கூறவில்லை.

பிறகு எனது உறவினர்கள் வீட்டிற்கு சென்றிருப்பாரா என்று விசாரித்து தேடினோம். பிறகு எனது சிறிய மாமா உறவினர்கள் வீட்டிற்கு செல்லவில்லை என்பதை உறுதி செய்துக்கொண்டோம். என் மாமாவும்

எதிரிகளும் எங்கள் ஊரில் பொதுவாக செல்லும் இடங்களுக்கு நாங்கள் சென்று தேடிப்பார்த்த போது அங்கும் அவர் கிடைக்கவில்லை. பிறகு மறு நாள் காலை என் அம்மா சுமதி கொள்ளைக்கு சென்ற போது எதிரி ராமு மற்றும் மணிகண்டன், மணிகண்டனின் வீட்டின் பின்பக்கம் நின்றுக்கொண்டு **"நாம் இருவரும் பாஸ்கரனை புதூர் பெருமாள் ஏரிக்கரை கரம்பு நிலத்தில் அடித்து போட்டது தெரியாமல் எங்கெங்கோ தேடி வருகிறார்கள்"** என்று எதிரிகள் இருவரும் பேசிக்கொண்டிருந்ததை கேட்டு விட்டு எனது மூத்த தாய் மாமனான முரளியிடம் வந்து கூறினார்.

பிறகு நானும் என் பெரிய தாய் மாமன் முரளியும் எதிரிகள் கூறிய புதூர் பெருமாள் ஏரிக்கரை கரம்பு நிலத்திற்கு சென்ற போது அங்கு என்னுடைய இளைய மாமா பாஸ்கரன் சடலமாக அழுகிய நிலையில், இடது பக்க தலையின் கீழ் இரத்த வெள்ளத்தில் காணப்பட்டார். அதற்கு அருகில் கருங்கற்கல் நிறைய இருந்து. என் மாமா இறந்த சமயத்தில் பச்சை கலர் கோடுப்போட்ட அரைக்கை சட்டையும், கருப்பு கலர் பேண்டும் அணிந்திருந்தார்.

பிறகு சம்பவம் குறித்து எனது பெரிய மாமா காவேரிப்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். பிறகு ஆஜர் எதிரிகளான ராமு மற்றும் மணிகண்டன் தான் என் தாய்மாமா பாஸ்கரனை கொலை செய்திருப்பார்கள் என்று உறுதி செய்தோம். பிறகு இது சம்பந்தமாக போலீசாரிடம் என் பெரிய தாய்மாமாவும், என் பாட்டியும் சென்று புகார் கொடுத்தார்கள். அந்த புகாரின் அடிப்படையில் என்னை போலீசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** செய்யப்படவில்லை

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.26 16:21:20 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.